## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## Ang Mo Kio Tamil Methodist Church

**31st ஆகஸ்ட் / August 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. சாலமோன்**<br>Mr. Solomon |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. சாலமோன்**<br>Mr. Solomon |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்**

*1. இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்*
*மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்*
*தேவகுமாரன் மீட்டுக் கொண்டார்*
*பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்*

**இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்**
**நேசரைப்பார்த்துப் பூரிக்கிறேன்**
**மீட்பரை நம்பி நேசிக்கிறேன்**
**நீடுழி காலம் ஸ்தோத்திரிப்பேன்**

*2. அன்பு பாராட்டிக் காப்பவராய்*
*என்தனைத்தாங்கிப் பூரணமாய்*
*இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்*
*இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்*

*3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்*
*துய்ய தேவாவி வல்லமையும்*
*புண்ணிய நாதர் தந்துவிட்டார்*
*விண்ணிலும் சேர்த்து வாழச்செய்வார்.*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் 35ம் ஞாயிறு**<br>“சங்கீதம் 103” | **சபையார் இணைந்து**<br>Congregation |

“கர்த்தர் இரக்கமுள்ளவர்”

Psalter Reading - “Psalm 103”

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>✝ Singspiration | |
| **சாட்சியின் நேரம்**<br>Time of Testimony | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**உன்னதமானவரின் - உயர் மறைவிலிருக்கிறவன்**

*1. உன்னதமானவரின் - உயர் மறைவிலிருக்கிறவன்*
*சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்*
*இது பரம சிலாக்கியமே!*

**அவர் செட்டையின்கீழ் அடைக்கலம் புகவே**
**தம் சிறகுகளால் மூடுவார்**

*2. தேவன் என் அடைக்கலமே என் கோட்டையும் அரணுமவர்*
*அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்*
*என் நம்பிக்கையும் அவரே*

*3. இரவின் பயங்கரத்துக்கும் பகலில் பறக்கும் அம்புக்கும்*
*இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்*
*நான் பயப்படவே மாட்டேன்*

*4 ஆயிரம் பதினாயிரம் பேர்கள் உன்பக்கம் விழுந்தாலும்*
*அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே!*
*உன் தேவன் உன் தாபரமே*

*5. தேவன் உன் அடைக்கலமே*
*ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ*
*ஒரு வாதையும் உன் கூடாரத்தையே*
*அணுகாமல் காத்திடுவார்*

*6. உன் வழிகளிலெல்லாம் உன்னைத் தூதர்கள் காத்திடுவார்.*
*உன் பாதம் கல்லில் இடறாதபடி*

*தங்கள் கரங்களில் ஏந்திடுவார்.*

*7. சிங்கத்தின் மேலும் நடந்து - வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்*
*அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்*
*உன்னை விடுவித்துக் காத்திடுவார்*

*8. ஆபத்திலும் அவரை நான் கூப்பிடும் வேளையிலும்*
*என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே*
*என் ஆத்தும நேசரவர்*

| | |
|---|---|
| ✝ ***பூலோகத்தாரே யாவரும்***<br>Doxology | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ ***திருமறைப் பாடம்***<br>Scripture Reading | ***திரு. கோவிந்தராஜு***<br>Mr.Govindaraju |

***யோவான் 14 : 18 - 21***

**John 14 : 18 - 21**

| | |
|---|---|
| ***அருளுரை***<br>Sermon | ***போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்***<br>Pastor. Jesudoss Charles |
| ✝ ***அர்ப்பணகீதம்***<br>Offertory & Closing Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

## கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்

***கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்***
***கவலை இன்னல் கஷ்டங்கள் தீர்ந்திடும்***
***கைவிடா காத்திடும் பரமனின் கரங்களை***
***நாம் பற்றிக் கொள்வோம்***

*1. ஜீவ தேவன் பின் செல்லுவோம்*
*ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம்*
*மனதின் காரிருள் நீங்கிடவே*
*மா சமாதானம் தங்கும்*

*2. உண்மை வழி நடத்திடும்*
*உத்தமனுக் கென்றும் கர்த்தர் துணை*
*கண்கள் அவன் மீது வைத்திடுவார்*
*கருத்தாய் காத்திடுவார்*

*3. இன்மைக் கேற்ற இன்பங்களை*
*நம்மை விட்டே முற்றும் அகற்றுவோம்*
*மாறாத சந்தோஷம் தேடிடுவோம்*
*மறுமை இராஜியத்தில்*

***அறிவிப்புகள்***
Announcements

| | |
|---|---|
| ✝ ***மனப்பாட வசனங்கள்***<br>Weekly Memory Verses | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***பிலிப்பியர்*** 4 : 8

Philippians 4 : 8

***8. கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.***

| | |
|---|---|
| ✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***<br>Closing Prayer & Benediction | ***மறைதிரு. விஜய் ஜோஸப்***<br>Rev. Vijay Joseph |

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும் ⁄*** **Indicates Congregation standing**